REGD. No. M. 6311

7

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 19]

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: தைத் 10௨ சனி (23—1—54) ★ ★ ★ வெளியூர்: தைத் 11௨ ஞாயிறு (24—1—54)

# தனி மாநிலம் கேட்டனர்—சிறைவாசம் கிடைத்தது!

## பீகானீரில் அறப்போர் துவக்கம்

### உணவுப் பண்டம் ஏற்றுமதி ஆவதை எதிர்த்து மறியல்

—(:)—

### கூட்டத்தைக் கலைக்க, கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரயோகம்!

31 பேர்கள் கைது

பீகானீர், ஜன. 22—

ராஜஸ்தானிலிருந்து, சுமார் 1 லட்சம் 75 ஆயிரம் மணங்கு கோதுமைத் தானியம் அரசாங்கத்தினரால் சேகரிக்கப்பட்டு வெளியே ஏற்றுமதி செய்வதைக் கண்டித்து, பீகானீரில் ஆரம்பிக்கப்பட்ட மறியலில் இதுவரை 31 பேர் கைதியாயுள்ளனர். இந்த அறப்போராட்டத்தில் பிரஜா — சோஷியலிஸ்ட் கட்சியினரும், மற்றும் அங்குள்ள சில அரசியல் கட்சியினரும் ஈடுபட்டுள்ளனர்.

பீகானீர் கலெக்டர் ஆபீசுக்கருகில், அறப் போராட்டத்தை ஆதரித்துக் குழுமியிருந்த 5,000 பேர் கொண்ட மக்கள் கூட்டத்தைக் கலைக்க போலீசார் பல தடவைகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனர். கடைசியாக தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். இதனால் கூட்டத்திலிருந்தோருக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட கைகலப்பில், போலீஸ்காரர்களில் மூவருக்கும், கூட்டத்திலிருந்தவர்களில் பலருக்கும் காயங்களேற்பட்டது.

இரண்டு நாட்களாக, பீகானீர் நகர் கடைகள், ஹோட்டல்கள் முதலியன எல்லாம், அறப் போராட்டத்தை ஆதரித்து மூடப்பட்டிருக்கின்றன.

போக்குவரத்து சாதனங்கள்—வண்டிகள், டோங்காக்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்துவிட்டன.

நகர் முழுவதும், இரும்புத் தொப்பி யணிந்த போலீஸ் பட்டாளம், நிறைந்திருக்கிறது.

மறியல், அரசாங்கத் தானியக் கிடங்குகளின் முன் நடைபெறுகிறது.

### பீதியினால் ஏற்பட்ட விளைவு!

டர்பன், ஜன. 23—

நாணய மதிப்பு குறையும் என்ற பீதியின் காரணமாக, தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு கோடி பவுன் வெளியேறியிருக்கிறது.

## கல்யாணி நோக்கி வந்த 65 காங்கிரசார் கைது!

### நேருவிடம் எடுத்துச் சொல்ல வந்தவர்களுக்கு நேரிட்ட கதி

### "தர்பங்கா 'அதிர்ச்சி'யடைந்தது!"

அசன்சால், ஜன. 22—

இந்தியத் துணைக் கண்டத்தின் வடகிழக்குப் பகுதி ...விலிருக்கும் தர்பங்கா, சபார்சா, பூர்னியா, சாம்பரான், மாங்கிர் ஆகிய ஜில்லாக்களை உள்ளடக்கி, "மிதிலா மாகாணம்" எனப் புது மாகாணம் அமைக்க வேண்டுமென்று, கல்யாணி காங்கிரசில் எடுத்துச் சொல்ல வந்த 65 காங்கிரஸ்காரர்கள், அசன்சால் இரயில்வே ஸ்டேஷனில் வண்டியிலேறும்போது, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் காங்கிரஸ் எம். எல். ஏ.-யும், சமீப காலம் வரை பீகார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருமாக இருந்த ஜானகி நந்தன் சிங் என்பவர் முக்கியமானவர். இவரும், இவருடன் சென்ற 64 தர்பங்கா காங்கிரஸ்காரர்களும் 'மிதிலா தனி மாகாண'க் கோரிக்கையை காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவிடம் தெரிவிக்கவே கிளம்பினர். ஆனால், அசன்சால் இரயில்வே ஸ்டேஷனிலேயே கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தனி மாகாணம் கோரிய 65 காங்கிரஸ்காரர்களைக் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து, மாகாண காங்கிரஸ் எம். எல். ஏ.-க்களும், எம். எல். சி.-க்களும், காங்கிரஸ் தலைவர் நேருவுக்கும், பீகார், மேற்கு வங்காள முதன் மந்திரிகளுக்கும் தந்திகள் அனுப்பியுள்ளனர். அத்தந்தியில், "ஜானகி நந்தனும், மற்றவர்களும் கைது செய்யப்பட்டது கேட்டு, தர்பங்கா மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## "நிர்ப்பந்தம் செய்தால் நேர்மாறான பலன்தான் கிடைக்கும்"

### மொழி வழி பிரிவினை கோருவோரை மிரட்டுகிறார் நேரு

காங்கிரஸ் நகர், ஜன. 22—

காங்கிரஸ் விஷயாலோசனைக் குழுவில், மாநிலங்களை மாற்றியமைப்பது சம்பந்தமான தீர்மானம் நிறைவேறியது. 9 பேர் எதிர்த்து ஓட்டளித்தனர்.

மாநிலங்களை மாற்றி அமைக்கும் பிரச்சினையை, நிதானமாகவும், விருப்பு—வெறுப்பு இன்றியும் அணுக வேண்டுமென இந்தத் தீர்மானம் கூறுகிறது.

இத்தீர்மானத்தின்மீது நேரு பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

"மொழிவழி மாநிலங்கள் வேண்டுமென்ற கோரிக்கை நாம் அறிந்ததே; அக்கோரிக்கை, எத்தன்மை வாய்ந்ததாக இருப்பினும், மாநிலங்களை மாற்றி அமைக்கையில், பல விஷயங்கள் சம்பந்தமாக — வேண்மோனும் சின்ன விஷயங்கள் என்றேவைத்துக் கொள்ளுங்கள்—இந்தியாவின் தேசப் படத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

### தாராசிங்—உதாம்சிங் குழுவினர் குழப்பம்

கலகம் மூண்டது — போலீஸ் தலையிட்டு அமைதியை நிறுவியது

அமிர்தசரஸ், ஜன. 23—

சிரோமணி குருத்துவார பிரபந்தக் கமிட்டியிலுள்ள இரு குழுவினரிடையே தகராறு ஏற்பட்டு கலகத்தில் வந்து முடிவடைந்ததாகத் தெரிகிறது.

உதாம்சிங் நாகக்கே தலைமையிலுள்ள ஒரு குழுவும், மாஸ்டர் தாராசிங் தலைமையிலுள்ள மற்றொரு குழுவும் கமிட்டி காரியாலயத்தைத் தங்கள் வசப்படுத்த முயன்றபோது அடிதடி ஏற்பட்டது; அறுவர் காயமடைந்தனர்.

கமிட்டியின் புதிய நிர்வாகியிடம் காரியாலய சாவிகளைக் கொடுக்க சிரோமணி அகாலிதள செயலாளர் சியானிகுர்பக்சிங் மறுத்தபோது தகராறு ஏற்பட்டது. அப்போது போலீஸ் தலையிட்டு அமைதிப்படுத்தினர்.

## தொழில் இல்லாதோர் துரத்தப்படுவராம்!

### இலங்கை இந்தியரின் எதிர்கால நிலை

### டில்லி ஒப்பந்தம்: இலங்கைப் பிரதமர் விளக்கம்

கொழும்பு ஜன. 22—

"வயது வந்தோர் பதிவில் காணப்படும் இந்தியர்கள் வேலையற்றவர்களாக இருந்தாலோ அல்லது வாழ வசதியற்றவர்களாக இருந்தாலோ, அவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படலாம்; தன் வேலையை மாற்றிக்கொள்ளும் இந்தியரும் இதேமாதிரி இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படலாம்."

"உடன்பாடு சம்பந்தமாக மொழித் தகராறு எழுப்பப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இப்பிரச்சினை முக்கியமானது; அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டியது. இதற்கிடையில், எண்ணையறிந்த தமிழர்கள், முஸ்லிம்களுக்கு; ஒரு உறுதியளிக்க விரும்புகிறேன். அவர்களுடைய மொழியின் எதிர்காலம் பற்றி அவர்கள் எவ்வித பயமும் கொள்ள வேண்டாம். சுருக்குவழி மூலம் தலைமைப் பதவிக்கு வர முயற்சிப்போர்தான் இம்மாதிரி பயத்தைக் கிளப்ப முயற்சிக்கிறார்கள்."

—இவ்வாறு, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, பத்திரிகை நிருபர்களிடையே டில்லி ஒப்பந்தம் பற்றி விளக்கம் தருகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் சொன்னார்:—

"தனது வேலையை இழந்த தொழிலாளர் இந்தியர் ஒரு மோட்டார் டிரைவராக வர முயற்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அம்மாதிரி செய்தால் அவர் இலங்கையில் இருக்க அனுமதிக்கப்படமாட்டார்.

"இலங்கை வாழ் இந்தியராகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோருக்கு கிராச்சுடி, இலவசப் பிரயாணம், இந்தியாவுக்குப் பணம் அனுப்ப அனுமதிப்பது போன்ற பல வசதிகள் தரப்படும்.

"இந்தியாவில் தொழில் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறது; நிலைமையில் மேலும் அபிவிருத்தி ஏற்பட்டால், இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்ட இந்தியரில் சிலர் கூட இந்தியா செல்ல விரும்பக்கூடும்.

"சிங்கள மொழி இரண்டாவது மொழியாக வைக்கப்படும். போதனா மொழி விஷயத்தில் மாறுதல் எதுவும் செய்யப்படமாட்டாது." (இலங்கைப் பகுதியில் 'பாஷை' என்றிருக்கும் வார்த்தை சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட பயத்தை போக்கவே அவர் இதை விளக்கியதாகச் சொல்லப்படுகிறது.)

## "தனி அரசு ஏன்?"

### ஆசைத்தம்பியின் நூலுக்கு மலாயாவில் தடை

கோலாலம்பூர், ஜன. 22—

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய 'தனி அரசு ஏன்?' என்ற புத்தகத்தை மலேயா பெடரேஷன் அரசாங்கம் தடை செய்திருக்கிறது.

"மலேயாவைப் பற்றி ஆட்சேபகரமான கட்டுரைகள் அதில் அடங்கியிருக்கின்றன" என்று பாதுகாப்பிலாக்கா அதிகாரி ஒருவர் சொன்னார்.

சென்னையிலிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிகள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

—('த. மு.')

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 23—1—1954 சனி



# கல்யாணியில் ஒரு நாள்!

★

## நாய்—வங்க முதலமைச்சர்

“இப்போதாவது தெரிந்து கொள்ளட்டும், என் திறமை எப்படிப்பட்டது என்பதை! வெட்ட வெளி என்று இருந்த இந்த இடம், இன்று ‘அழகாபுரி’யாகக் காட்சி அளிப்பது எவர் திறத்தால்! விண்ணிலே, வெகு தொலைவிலே உள்ள விண்மீன்களே இங்கு ஒளி விளக்காக வந்தமைந்தனவோ என்று எண்ணும்படி ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன்; பணத்தை வாரி இறைத்திருக்கிறேன்—பாங்கான சூழ்நிலை ஏற்பட! மணம் வருகிறதா? ஆமாம்! அறுசுவை உண்டி! ஓவியக் காட்சி ஒருபுறம்! நடன நாடகக் கொட்டகை, அதோ! இந்த அரசியல் ‘கும்பமேளா’வைக் கண்டபிறகு, வங்கத்தின் பெருமையையும், அந்தப் பெருமையை வளர்த்திட அரும்பாடுபடும் என் திறமையையும், அவர் அறியாமலிருக்க முடியுமா! வந்தே மாதரம்! அதோ வருகிறார் நேரு. அவர் கண்களிலே களிப்பு கூத்தாடுகிறது! நமது அருந்திறனை அவர் அறிந்துகொண்டு விட்டார்! பட்டபாடு வீண் போகவில்லை! வீண் போகாது!!”

★

## நேரு

“ஜெய் இந்! ஜெய் இந்! இங்கேயும் எனக்கு அமோகமான வரவேற்புதான்! எங்கேதான் இல்லை! இந்தச் செல்வாக்கு அல்லவா, நமது கோட்டையிலே உள்ள செல்லாக் காசுகளையும் சின்னம் பணமாக்குகிறது! ஆங்காங்கு உள்ள ஊழல், திறமைக் குறைவு, சுயநலம், உட்பூசல் எல்லாவற்றையும் மூடிவைக்க இந்தப் பொன்னுடை பயன்படுகிறது. ஆனால் எவ்வளவு காலத்துக்கு? பொன்னுடையின் வண்ணம் மங்கிக்கொண்டு வருகிறது! பன்முறை பயன்படுத்திப் பயன்படுத்தி, நைந்து போயுமிருக்கிறது. என் செய்வது! திருவிதாங்கூரிலிருந்து பஞ்சாப் வரையிலே, கிறலும் கிலேசமும், பிளவும் பேதமும் வளர்ந்தபடி இருக்கிறது! இந்த ‘அழகாபுரி’யிலே அனைவரும் ஆனந்தமாகத்தான் இருக்கிறார்கள்; ஆயினும், ஒவ்வொருவர் மனதிலும் ஈடேறாத ஆசைகள்’ குடைந்தபடி இருக்கின்றன அந்த ‘ஆசைகளை’ ஈடேற்றி வைக்க நான் உதவவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இயலுமா? இயலாது போனால், இன்முகம் காட்டும் இவர்களே பன்றோ எனக்கு வைரிகளாகி விடுவர்! அன்று அந்த முதியவர் தாராசிங் என்னைப் படுத்திய பாடு! செச்சே! எண்ணிக்கொள்ள எனக்கே அல்லவா வெட்கமாக இருக்கிறது! ஆனால், ஒரு வகையில் பார்க்கும்போது, அந்த தாராசிங் எவ்வளவோ நல்ல மனிதர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில்லை; அடிக்கிறார்—வெடிக்கிறார்; எனினும், தோழமை காட்டிக் கழுத்தறுப்பவர் அல்ல! இதோ, என்னை வானளாவப் புகழ்கிறார்களே, புன்னகைப் புலிகள், அப்பப்பா! இவர்கள் ஒவ்வொருவர் மனதிலும், உள்ள எண்ணங்களையும், அவை ஈடேற அவர்கள் கையாளத் தயாராக உள்ள முறைகளையும் எண்ணிப் பார்த்தால், அச்சமும் அருவருப்புமாகவன்றோ இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் தந்த ஐயனே, வருக!—என்று உபசாரம் கூறுகின்றனர்; அந்தத் திட்டம் செத்துவிட்டது என்று, நான் இல்லாதபோது பேசிக் கேலி செய்கின்றனர். உலகிலே தோன்றியுள்ள சமாதான ஒளியே, வருக!—என்று வாழ்த்துகின்றனர்; நான் இல்லாத போதோ, ராஜதந்திரத் துறையிலே நான் பெற்ற பலன் பூஜ்யம் என்று கேலி பேசுகின்றனர். பால சந்யாசியைக் காட்டி, ‘இவர் பதினான்காண்டுகள் பத்மாசனத்தில் இருந்தவர், பசி என்பது இவரைத் தீண்டுவதில்லை, யாதிராத்திரியில் பத்ரகாளி இவருடன் சொக்கட்டான் ஆடுகிறாள்’ என்றெல்லாம் பச்சைப் புளுகு பேசி, உண்டிகளைக் குலுக்கிப் பிழைக்கும் பூஜாரிக் கூட்டத்தினர் போல, என்னைப் பற்றி வானளாவப் புகழ்ந்து, மக்களை மயக்கித் தமது மந்தகாச வாழ்வுக்கு வழி தேடிக்கொள்கிறார்கள். புரிகிறது! எனினும், வெளியே கூற முடிகிறதா? கூறினால், மடாலயத்தின் எதிர்காலம் என்ன கதி ஆவது? அதோ, ஆந்திர நாட்டு உறுப்பினர், குழையக் குழையத்தான் பேசுகிறார்! ‘நமஸ்தே பண்டிட் ஜீ!’ என்று கூறும்போது, முகத்திலே புன்னகை தவழுகிறது! ஆனால் அதே தலைவர், ‘ஆந்திர மாகாணம் இப்போது ஒன்றும் அவசரமில்லை—பொறுத்திருந்து பார்ப்போம்,’ என்று நான் சொன்னபோது, எவ்வளவு கூவினார், கொக்கரித்தார், எந்தக் கொடிக்கு இன்று வணக்கம் கூறுகிறாரோ, அதையே அன்று கொளுத்தினார், ரயில்களைக் கவிழ்த்தார், டில்லி ஆதிபத்யம் ஒழிக என்றார். கடைசியாக நான் அவர் கோரிக்கைக்கு இணக்கம் காட்டிய பிறகுதான், பழையபடி ‘நேரு வாழ்க’ என்று கூறினார். பொல்லாத பேர்வழிகள்! நான் அவர்கள் சொல்வதற்கெல்லாம் சம்மதம் காட்டுகிற வரையில் புகழ்வார்கள்! இல்லையோ? எதிர்க்க அஞ்சுவதில்லை. இப்போதும், ஹைதராபாத் சமஸ்தானத்தைத் துண்டாடியாக வேண்டுமாம். துடிக்கிறார்கள் ஆந்திரர்கள். நிஜாமோ பாபம், எவ்வளவு சாதுவாக இருக்கிறார்; ஒவ்வொரு தடவை நான் ‘விஜயம்’ செய்கிறபோதும், இந்தத் தள்ளாத வயதிலே, விமான நிலையம் வருகிறார், என்னை வரவேற்க! விருந்தும் உபசாரமும் விமரிசையாக நடத்துகிறார்; அரண்மனையை எனக்கு விடுதியாக்கித் தருகிறார்; ‘அவரை விரட்டிவிட வேண்டும், நாட்டைத் துண்டு போட்டு ஆளுக்குக் கொஞ்சமாகத் தந்துவிட வேண்டும்’ என்று கேட்கிறார்கள். எப்படி நான் அதற்குச் சம்மதிக்க முடியும்? கண்டிப்பாகத்தான் பேசப் போகிறேன். ஆமாம், ‘துண்டாட முடியாது’ என்று கூறிவிடப் போகிறேன். ஆனால்? சும்மா இருப்பார்களா? ஆர்ப்பரிப்பார்களே! இன்று என்னை வாழ்த்தும் இதே தலைவர்கள், தூற்றுவர், எதிர்ப்பர், பணியவைப்பர்! பாகு மொழி பேசுகின்றனர் இன்று. நாளை? புயலாக அல்லவா மாறிவிடுவர். செச்சே! என்ன செல்வாக்கு இது!! ‘மராட்டியம் எமது மண்டலம்’ என்று முழக்கமிடுகிறார்கள்; ‘பம்பாய் மராட்டியத்துக்குத் தலைநகர்’ என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். குஜராத்திபோ, ‘பம்பாயை மராட்டியருக்குத் தந்தால், தீர்ந்தது, உமக்கும் எமக்கும் ஒட்டு இல்லை, உறவு இல்லை, வருவதை அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டியதுதான்’ என்று மிரட்டுகிறார்கள். பணத்தாலேயே அடிப்பார்கள் குஜராத்திகள்; மராட்டியரோ, ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாராசிங் ஆகிவிடுவர். நாளைய தினம் இந்தக் கோலம் கொள்ளப்போகும் இவர்கள், இன்று என்னை இங்கு வாழ்த்துகிறார்கள், வரவேற்கிறார்கள்! என்ன உலகமடா இது! ஆயினும், பொதுவாகப் பார்க்கும்போது, காட்சி ஆனந்தமாகத்தான் இருக்கிறது. வெளிநாட்டுக்காரர்கள் இந்தியாவின் இணையில்லாத் தலைவர் நேருதான் என்று கூற, இந்தக் காட்சிகள் மெத்தப் பயன்படுகின்றன. அந்த அளவிலே இது விரும்பத்தக்க காட்சிதான்!”

☆

## பக்ஷி குலாம்

“மகிழ்ச்சியாகவுமிருக்கிறது, மருட்சியாகவுமிருக்கிறது. நானல்லவா ‘ஷேரே காஷ்மீர்’ ஆகிவிட்டேன்! காணும் போதே, கைகுலுக்க வருகிறார்கள்! காஷ்மீர் உமது கரத்தில் இருக்கிறது, நேரு உமது நெஞ்சில் உறைகிறார் என்று புகழ்கிறார்கள். பாகிஸ்தானின் ‘வகுப்புவாதப் புயலையும், அமெரிக்காவின் ‘பணப் புயலையும்’, ரஷியாவின் ‘பிரசாரப் புயலையும்’, எழில் மிக்க காஷ்மீரத்திலே புகவிடாமல் தடுக்கும் பேராற்றல் எனக்கே உண்டு என்று புகழ்கிறார்கள். மன்றத்திலே முதலிடம் அளிக்கிறார்கள்; மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது; மறுகணமோ மருட்சி ஏற்படுகிறது; இதே அளவிலும், வகையிலும் வரவேற்று உபசரிக்கப்பட்டவர்தானே, ஷேக் அப்துல்லா! காஷ்மீரின் தனி அரசுக்காகப் பாடுபடக் கிளம்பியவுடனே, வரவேற்புரைகள் வசவுகளாகி, அவர் சிறையிலல்லவா தள்ளப்பட்டுவிட்டார்! அவருக்கு நேரிட்ட கதி நமக்கும் வருமோ என்று எண்ணத் தோன்றுகிறது; மருட்சியும் பிறக்கிறது. எதற்கும் இன்றைய களிப்பை அனுபவிப்போம், அதோ குலவ வருகிறார்கள் தலைவர்கள்!!”

★

## முதலாளிகள்

“நேரு, நேருதான்! ரஷியா சென்று வந்தவர்; சமதர்மக்காரர்; பொது உடைமை பேசுபவர்; இப்போதும் சைனாவிடம் சரசமாடுகிறார்; எனவே, நமது ஆதிக்கத்துக்கு உலைவைப்பார் என்று நாம் அஞ்சிக் கிடந்தோம்; சீறிச் சீறிப் பேசுகிறார்; வறண்ட தலைமக்களைப் பார்க்கும்போது கண்களிலே நீர் சுரக்கிறது என்று பேசுகிறார்; இலாப வேட்டையை ஒழிப்பேன், கள்ள மார்க்கெட்டை அழிப்பேன் என்று முழக்கமிடுகிறார்; இல்லாமை, இயலாமை ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவேன், ஏழைகளின் வாழ்வுக்கான திட்டம் தீட்டுவேன் என்று எக்காளமிடுகிறார். எனவே, இவர், நமது ஆதிபத்தியத்தை, தனி உடைமைத் தொழில் முறையைத் தகர்த்துவிடுவார் என்று வீணாகச் சந்தேகம் கொண்டு சஞ்சலமடைந்தோம்; இதோ நேரு, திட்டமாக, தெளிவாக, வீரமாகக் கூறுகிறார்—தொழில்களைத் தேசியமயமாக்குவது கூடாது; அதைக் குறித்துப் பன்னிப் பன்னிப் பேசுதல் அடாது—என்று கூறிவிட்டார்; சமதர்மம் பேசித் திரிவோர் வாயடைத்துப் போயினர்; இனி நமது ஆதிக்கத்துக்குத் துளியும் ஆபத்து இல்லை; தொழில்கள் நமக்கே, இலாபம் நமக்கே, ஆட்சியே நமக்காகத்தான்; நேருவை வாழ்த்துவோம்; அவர் ஆட்சியை ஆதரிப்போம்; ஜவார்லால் நேருக்கீ ஜே! ஜே!!”

☆

## வங்க வீரன்

“வங்கமே! தாயகமே! உன்னிடமிருந்து கிளம்பிய தேசியக் கனல்தான், இந்தத் துணைக்கண்டம் முழுவதும், தியாகத் தீயை மூட்டிற்று! நீ அளித்த ‘மணிகள்’ பாரத தேவிக்குப் பண் பாடின! தூரம் போகும், தந்தாய்! தரணி திடுக்கிடத்தக்க புரட்சி வீரர்களைத் தந்தாய், தாயகமே! உன் உள்ள உரம் அறியாத வெள்ளையன், உன்னைத் துண்டாடக் கிளம்பினான்—உன் போர்க்கோலம் கண்டு, வெட்டுண்ட வங்கத்தை மீண்டும் ஒன்றாக்கித் தந்தான்! வங்கமே! உன் தவப்புதல்வன் சுபாஷ் சந்திர போஸ்—சிலை உருவில்!! தாயே! அந்தத் தனயன் காட்டிய வீர தீரமும், தியாகமும் கொஞ்சமா? ஆயிரமாயிரம் இளைஞர்களை, எஃகுக் கம்பிகளாக்கி, ஏறு நடை போட்டு களம் சென்று கடமையாற்றிய வீரன்! அவனை, இந்தக் காங்கிரஸ் என்ன பாடுபடுத்திவிட்டது! உடன் பிறந்தார் இருவர் என்று ஊரார் கூறுமளவுக்கு, போசும் நேருவும் இருந்தனர்—எனினும் போசுக்கு அநீதி இழைக்கப்பட்டு, அவர் காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டபோது, நேருவும் துணை நிற்கவில்லையே! இன்று சுபாஷ் வாழ்ந்த வங்கம், விழாக் கொண்டாடுகிறது—எந்தக் காங்கிரஸ் அவரை வதைத்ததோ அதே காங்கிரஸ், அரசியல் ‘கும்பமேளா’ நடத்துகிறது! தாயகமே! இரத்தக் கண்ணீரல்லவா சொரிவாய் இந்தக் காட்சியைக் கண்டு! அன்னியனால் உன்னைத் துண்டாட முடியாது போயிற்று; உன் கோபப் பார்வை அவனைச் சுட்டுச் சாம்பலாக்கிற்று; ஆனால் அன்னையே! விழா நடாத்தும் காங்கிரஸ் தலைவர்கள் உன்னைத் துண்டாடி விட்டார்கள்!! வங்க வீரனை வதைத்தவர்கள், வங்கம் வெட்டப்படுவதற்குத் துணை நின்றவர்கள், விழாக் கொண்டாடுகிறார்கள். வேதனை எனக்கு! விழா வீணர்களுக்கு!”

★

## ஏழை

“கொடி பறக்குது வானளாவ, கும்பியோ காய்கிறது! கோலாகலமான ஊர்வலங்கள் இங்கு, நாட்டிலோ பட்டினிப் பட்டாளம் பவனி வருகிறது. திட்டத்தின் மேல் திட்டம் தீட்டிக் குவிக்கிறார்கள், பட்ட மரம் துளிர் விடும் என்கிறார்கள், வெட்டிய ஆற்றிலே தேனும் பாலும் கலந்தோடும் என்று சிந்து பாடுகிறார்கள்; ஆனால், நாமோ, வாழ வகையற்றுக் கிடக்கிறோம். தேசம் பார், எமது நோக்கம் அங்கே தெரிகிறது பார், என்கிறார்கள்; நோக்கம், இலட்சாதிகாரியைக் கோடீஸ்வரனாக்குவது தெரிகிறது! ஒட்டிய வயிறு எங்களுக்கு, அது மாறக் காணோம்! தரித்திரம் பிய்த்துத் தின்கிறது—பணமோ, பட்டாளத்துச் செலவாகி வருகிறது! இப்படிப்பட்ட காங்கிரசிலே முன்பெல்லாம் கூடி முழக்கமிட்டார்கள் இதே தலைவர்கள்—ஐநூறுக்கு மேல் சம்பளம் கேளோம், வெள்ளை அதிகாரி கொண்டிருந்த ஆட்டகாசக் கோலத்தைக் கொள்ளோம், ஜனநாயகத்தைத் தழைத்திடச் செய்வோம், அடக்குமுறையை அழித்தொழிப்போம்—என்றெல்லாம்! இன்றோ? இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்றாகிவிட்டது. இந்த இலட்சணத்தில் விழாவாம், விழா! யாருக்கு இந்த விழா? காங்கிரசின் மூலம் கனவானானவர்களுக்கு இது விழாதான், சந்தேகமில்லை; ஆனால், வியர்வையை, இரத்தத்தை, கண்ணீரைக் கொட்டி காங்கிரசை வளர்த்த எங்களுக்கு, இது, விழாவா? உழைக்கும் மாடுக்காவது, ஆண்டுக்கு ஒரு நாள் கொம்பு சீவி, வண்ணம் தீட்டி, சதங்கை கட்டி, அழகு பார்ப்பார்கள். ஏழைகளாகிய எமக்கு அதுவும் இல்லையே! ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள், அமெரிக்க உதவி என்கிறார்கள், விஞ்ஞானத் திட்டம் என்கிறார்கள், விண்ணவன் அருள் காட்டும் மெய்ஞான திட்டம் என்கிறார்கள்—ஏதேதோ பேசுகிறார்கள்—நமக்கோ பசியெடுக்கிறது, குடும்பம் வாடுகிறது. முதலாளியோ கொட்டமடிக்கிறான்; அவன் கரத்திலே கொடி இருக்கிறது, கோல் கொண்டோர் அவனுக்குக் குற்றேவல் புரிகிறார்கள்; இந்தக் கொடுமையை நடத்திக் கொண்டு, கொண்டாட்டம் வேறு! கும்பமேளாவே பரவாயில்லை! இந்த அரசியல் கும்பமேளா, எம்மைக் கேலி செய்யும் விழாவாக அமைந்திருக்கிறது! நாங்கள் விழாக் கொண்டாடுவது எப்போது? கொண்டாடுவோமா? இவர்கள் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்குமட்டும், ஏழையின் விழா ஏது? எங்கே அதற்கான சூழ்நிலை? ஒரே இருள்! விளக்கொளி, சீமான்களின் வைரங்களை மேலும் ஜொலிக்க வைக்கின்றன; எமது கண்களையோ அந்த ஒளி குத்திக் குடைகிறது. எமது கண்ணீருக்கு மதிப்பளிக்க வந்தவரோ, கல்லறை சென்றார். விழா நடத்துகிறார்கள், விழா! புலியும் குட்டிகளும் பூரிப்புடன் விளையாடுகின்றன; புள்ளிமானின் இரத்தம் மண்ணைச் சேறாக்கி விட்டிருக்கிறது.”

★

## மூவர்—சென்னை வாசிகள்

“அவர் மட்டும் வராத காரணம்?”

“உடல் நலம் இல்லை!”

“பொருந்தப் புளுகும்மய்! உடல் நலம், காரியக் கமிட்டிக்கு வர இடந்தருகிறது, இங்கிருக்கு வர மட்டுந்தான் இடம் தரவில்லையோ?”

“அவர் சொன்னதைச் சொன்னேன், ஸ்வாமிகளே!”

“அவர்தான் எதற்கும் சமர்த்தாக எதையாவது சொல்லி வைப்பாரே, அதையார் கேட்கிறா. உம்ம அபிப்பிராயம் கூறும்.”

“என் அபிப்பிராயமா.....”

“யாரும் இல்லை, சொல்லும்!”

“எப்படி அவருக்கு இங்கு வர விருப்பம் பிறக்கும்? இங்கு சகலரும், நேரு, நேரு என்று முகஸ்துதி செய்திண்டிருப்பா. அதைக் கேட்டுண்டு இருக்க வேணும்!! பல பேர் பலவிதமான விஷயத்தைக் கிளறுவா. காமராஜருக்கும் உமக்கும் ‘ராசி’யே கிடையாதா என்று சிலர் கேட்பா. உமக்கு, எதற்காகத்தான் இந்தத் தள்ளாத வயதிலே தொல்லை! காங்கிரசிலேயே பெரும்பான்மையா உள்ளவா, வேண்டாம் என்று கூறியான பிறகு, ஏன் பதவியில் இருக்க வேண்டும்—நீர் வாழ்ந்த வாழ்வு என்ன, இப்போது இருக்கிற நிலை என்ன! பேசாமல் பதவியை உதறித் தள்ளும் என்று சில பேர் பேசுவா. இதையெல்லாம் எப்படிக் கேட்டுச் சகிப்பது? அதனால்தான் அவர் வரவில்லை”

“புத்திசாலி ஓய்! அனுபவஸ்தர்! அதனால்தான் அவர் வரவில்லை.”

“வந்தவா மட்டும், என்ன வாரி கட்டிண்டாள். ஒரு பிரச்னைக்கும் பரிகாரம் இல்லை! ஒரு சிக்கலும் தீரவில்லை! ஒரு உட்பூசலுக்கும் மருந்து தேடக் காணோம்.”

“ஆமாம். அப்படிப் பார்க்கப்போனா, பலன் இல்லைதான்—ஆனாலும் திருவிழா போல இருக்கு பாரும்! பிரம்மானந்தமா இருக்கு.”

“கொஞ்சமான பணமா செலவாகி இருக்கு; சர்க்கார் ஜரூரா வேலை செய்திருக்கு; அலங்காரம் அமோகமா இருக்கு.”

“அழகாகத்தான் இருக்கு ஓய்! காத்து பார்த்தீரா, “ஜிலு ஜிலு’ன்னு.”

“ஆமாம், சிம்மதியா இருக்கு—கடற்கரையிலே இருக்கிற மாதிரியா இருக்கு...........”

“காத்து கொஞ்சம் பலமா அடிக்கிறது—அடடா! மழை ஓய்! பெருமழை வரும்போலிருக்கு, வாரும், ஜாகைக்கு போவோம்; நாம் சந்தோஷமாக இருக்கிறது, வருண பகவானுக்கும் பிடிக்கல்லே, போலிருக்கு!”

“ஆமாம், அப்படித்தான் தோணறது.”

“மழை அல்ல பெரியவர்களே! மழை அல்ல! ஏழையின் கண்ணீர்! காற்று அல்ல, கனவான்களே! காற்று அல்ல, விரைவிலே வர இருக்கும் புயலின் முன் அறிவிப்பு!”

“யார் இந்தப் பித்தன்?”

“பித்தனல்ல! நம்பி மோசம் போனவன். ஏழை. கதரை நம்பிக் கிடந்தவன். பலரை ‘தனம்’ ஆக்கினவன் ஏழை, பேசுகிறேனய்யா, ஏழை!”

## இது நீதியா?

இராமநாதபுரம், ஜன. 22—

ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தோழர்கள் நடராசன் இராமன், இருவரும் தமக்கு விதிக்கப்பட்ட அபராதம் ரூ 5 கட்டமறுத்து இருவார சிறைத் தண்டனை அனுபவித்தும் கூட, போலீசார், அபராதத் தொகைக்காக தோழர் நடராசனின் வீட்டுக் கதவை ஜப்திக்காக அப்புறப்படுத்த முயன்றனர்; ஆனால், அவரது உறவினர் ரூ 5 கட்டி மீட்டனர். அதேபோல தோழர் இராமனின் சைக்கிளை எடுத்துச் சென்றுவிட்டனர்.

## இலக்குமணபுரி தி. மு. கழகம்

பெங்களூர், ஜன. 22—

17—1—54-ல், தோழர் எம் கிருட்ணன் தலைமையில், காலை 10 மணிக்கு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது:—

பிப்ரவரி திங்களில், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் பெங்களூருக்கு வருவதைக் குறித்து, அதற்காக குடி சதிவழக்கு நிதிக்காக, குழு ஒன்று அமைக்கப்பட்டது. பொதுச்செயலாளரிடம் ரூ 300 கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதுடன், கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— வே. அ. தாமோதரம் வரவேற்பு குழுத் தலைவராகவும், எம். கிருட்ணன் செயலாளராகவும், எம். தர்மலிங்கம், சி. வெங்கிடசாமி பொருளாளர்களாகவும், மற்றும் 25 பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

## புதிய கல்வித் திட்டம்

மத்திய கல்விக்குழு ஆராயும்

சென்னை, ஜன. 21—

மத்திய கல்வி ஆலோசனை போர்டு நடக்கவிருக்கும் கூட்டத்தில் சென்னை புதுக் கல்வித் திட்டத்தையும், பாருலேகர் கமிட்டி அறிக்கையினையும் ஆராயுமென்று தெரிகிறது. இது விஷயத்தில் திட்டமான முடிவை ஆலோசனைக்குப் பிறகு கமிட்டி அறிவிக்கும்.

## காடுகொண்டபள்ளி தி. மு. கழகம்

பெங்களூர், ஜன. 22—

15—1—54-ல், தி. மு கழகச் சார்பில், அசோகா டாக்கீஸ் எதிரில் மாலை 6 மணி அளவில், வே. இளஞ்சேரன் தலைமையில், பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி அவர்கள், இயக்க லட்சியம் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

## மண்ணச்சநல்லூரில் பொதுக்கூட்டம்

தி. மு. கழகத் துவக்கம்

மண்ணச்சநல்லூர், ஜன. 22—

18—1—54ல், தி. மு கழகச் சார்பில், தோழர் எம். ராமநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் மு. கருணாநிதி, அம்பில் தர்மலிங்கம், மற்றும் பலரும் பேசினர் தோழர் கருணாநிதிக்கு கழகச் சார்பில், வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

இவ்வூரில் புதிதாகத் துவக்கப்பட்ட இக்கழகத்திற்கு, கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: எம். ராமநாதன்; துணைச் செயலாளர்கள்: என். கே. சாமிதுரை, மு. அம்பலத்தரசன்; பொருளாளர்: எம். பி. அண்ணாமலை; மாவட்டப் பிரதிநிதி: என். சுந்தரராசன்; சி. மதிவாணன், மு. கிருட்டிணன், சிவானந்தம், அனந்தன், அறஅரசன், புரட்சிவீரன், ராத. அரசன்.

## திருச்சி 20-வது வட்ட தி. மு. கழக ஆண்டுவிழா

10—1—54 காலை 10 மணியளவில் திருச்சி தேவர் மன்றத்தில், 20-வது வட்டார தி. மு. கழக முதலாவது ஆண்டுவிழா தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். நெடுமாறன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மதுரை முத்து, ஆகியோர் பேசினர். கல்லக்குடி அறப்போரில் சிறைமீண்ட தோழர்கள் கி. வெங்கிடாசலம் எம். முத்து ஆகியவருக்கு கைத்தறித் துண்டும், கழக ஓவியர் டி. எம். கோபாலகிருஷ்ணனுக்கு இரண்டு புத்தகமும், தோழர் ஒய். சலாவுதீன் சார்பில் தோழர் என். எத்துராசுவுக்கு இரண்டு புத்தகமும், தோழர் ஆசைத்தம்பி அவர்களால் பரிசுகளாக வழங்கப்பட்டன.

## வேட்டவலத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

18—1—54 மாலை 7 மணிக்கு வேட்டவலம் கிளைக் கழக சார்பில், மந்தவெளி மைதானத்தில் தோழர் பி வைத்திலிங்கம் தலைமையில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வே. அ. கிருட்டிணன் ‘தமிழும், தமிழ் நாடும்’ என்பது பற்றி பேசினார்.

அடுத்து, தோழர் என். வி. நடராசன் அவர்கள், “நாட்டின் நற்பணியில் தி மு கழகம்” என்பது பற்றி விரிவுரையாற்றினார்.

அத்துக்குடி வழக்கு நிதிக்காக கூட்டத்தில், ரூ 3—13—6 வசூலித்து, தோழர் நடராசன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.



# மதுரை இளைஞர் காங்கிரசார் மீது வழக்கு

மதுரை, ஜன. 23—

தி. மு. கழகத்தைச் சேர்ந்த, தாளமுத்து - நடராசன் நினைவுப் படிப்பகம், இளங்கோ மன்றம் ஆகியவற்றைத் தாக்கியும், படிப்பகத்திலிருந்த பொருட்களுக்குச் சேதம் உண்டுபண்ணியதாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த வி கோபால், எம். வீரைய்யா, சுப்பிரமணியபாரதி, சுப்புராமாச்சாரி உட்பட 27 பேர்கள் மீது போலீசாரால் தொடரப்பட்ட ஜாமீன் வழக்கு 20—1—54-ல், நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு பி. எஸ். தங்கமணி முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இளங்கோ மன்றத்தின் செயலாளர் ஆர். கே. காசி, அரசாங்கத் தரப்பில் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

“நான், இளங்கோ மன்றத்தின் செயலாளராக இருந்து வருகிறேன்; கடந்த 15—3—53-ம் தேதி இரவு, மன்றத்தில் படுத்திருந்தேன்; அப்போது, தெற்கேயிருந்து வடக்கு நோக்கி 150 பேர்கள் கொண்ட கூட்டம் வந்தது; அந்தக் கூட்டத்தின் சத்தத்தைக் கேட்டு நான் எழுந்துவிட்டேன்; அந்தக் கூட்டத்தில், செபாஸ்டின், பிச்சம் ஆகியோர் இருந்தனர்; கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவர் என்னை அடித்தார்; உடனே ஒரு சந்து வழியாக நீகல் டாக்கிசிற்குப் போனேன்; அங்கு, ‘ஒரே வழி’ என்ற நாடகம் நடந்து கொண்டிருந்தது; அங்கே இருந்த தோழர்கள் முத்து, அய்யாசாமி ஆகியோரிடத்தில் விபத்தைக் கூறினேன்; நாடகம் முடிந்தவுடன், தி மு. கழகச் செயலாளர், மற்றும் சிலருடன் இளங்கோ மன்றத்திற்கு வந்து பார்த்தோம்; மன்றத்தின் பீரோ, புத்தகம் ஆகியவைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டு எரிந்து போயிருந்தது; மன்றத்தின் கதவு உடைக்கப்பட்டுக்கிடந்தது; மறுநாள் காலையில் நானும், விவேகானந்தம் என்பவரும் போலீசு நிலையத்திற்குச் சென்று புகார் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.”

சாட்சியை குற்றவாளியின் தரப்பு வழக்கறிஞரான திரு வைகமிராசிம்மன் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது.—

“பிச்சமும், செபாஸ்டினும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியும்; காங்கிரசு வேலைகளைச் செய்வார்கள்; சம்பவம் நடைபெற்ற தினத்தில் நான் வேறு மன்றத்தைச் சேர்ந்தவர்களைப் பார்க்கவில்லை; கூட்டத்திலிருந்தவர்கள் தீப்பந்தம், கம்புகளுடன் சத்தம் போட்டுக் கொண்டு வந்தார்கள்; அப்போது மணி 11 இருக்கும்; கூட்டத்தினர் என்னைத் தாக்கியவுடன் நாங்கள் ஓடிவிட்டோம்; பின்னர், அவர்கள் என்ன ஆனார்கள் என்று சொல்ல முடியாது; போலீசாரிடத்தில் புகார் செய்யும்போது செபாஸ்டின் பெயரைச் சொன்னதுடன், மற்றும் இரண்டு பெயர்களையும் சொல்லியிருக்கேன்; இந்த கூட்டத்தினர் இளங்கோ மன்றத்தைத் தான் தாக்கிச் சேதப்படுத்த வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை; தோழர்கள் முத்து, மற்றவர்களிடத்தில், இளங்கோ மன்றம் சேதப்படுத்தப்பட்டிருக்கும் என்பதைக் கூறினேன்; இரண்டு மணிக்குமேல் வண்டியில் ஏறிக்கொண்டு சென்று இளங்கோ மன்றம், தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம் ஆகியவற்றைப் பார்வையிட்டோம்; போலீசு நிலையத்தில் புகார் செய்துவிட்டு, அதில், தோழர் முத்து கையெழுத்துப் போட்டாரா என்பது தெரியாது; இளங்கோ மன்றம் தாக்கப்பட்டது என்று போலீசு நிலையத்தில் முத்து கூறினாரா என்பதும் தெரியாது; பிச்சமும், செபாஸ்டினும் இளைஞர் காங்கிரசில் முக்கியமானவர்கள் என்பதற்காக அவர்கள்மீது சாட்சியம்சொல்லவில்லை; சம்பவம் நடைபெற்ற தினத்திலேயே அவர்களைப்பற்றி போலீசில் புகார் செய்தேன்; ரயில் நிறுத்தப் போராட்டத்திலும் நான் கலந்து கொண்டேன்.”

அடுத்தபடியாக பாண்டியன் என்பவர் சாட்சியமளித்தார். அரசாங்கத்தரப்பு வழக்கறிஞர் தூர். சுந்தரராசய்யங்காரின் கேள்விக்கு பதிலளித்து சாட்சி கூறியதாவது:

“தாளமுத்து—நடராசன் படிப்பகத்தில் நான் உறுப்பினராக இருக்கிறேன்; 15-3-53-ல் நானும் பேச்சிமுத்து என்பவரும் என் மாமனார் வீட்டில் இருந்தோம்; அன்று காமராஜ வாசகசாலை ஆண்டு விழா நடைபெற்றது. பின்னர், அலிபார் குழுவினர் இன்னிசை விருந்தும் நடைபெற்றது; சிறிது நேரத்தில் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது; எங்கள் மாமனார் வீட்டிற்கு முன்னால் ஒரு வீட்டின் முன்பிருந்த கழகக் கொடியை அறுத்துவிட்டதுடன், அந்த வீட்டிலிருந்த தோழர் அண்ணாதுரையின் உருவப் படத்தையும் உடைத்தனர். பாட்டு கச்சேரி நடைபெற்ற பக்கமாக இருந்து இக்கூட்டத்தினர் வந்தனர்; கம்புகளால் அடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினரை நான் கைகளால் தடுத்தேன்; அதனால் எனக்குக் கையில் காயம் ஏற்பட்டது; அக்கூட்டத்தில் தவசி, முசோலினி மற்றும் சிலர் இருந்தனர்; வீட்டின் முன்னால் இருந்த படத்தை அடித்ததால் படம் நொறுங்கிவிட்டது.”

குறுக்கு விசாரணையின்போது சாட்சி கூறியதாவது:

“தவசி என்பவர் என்னுடைய சொந்தக்காரர்தான்; பல நாட்களாகத் தெரியும்; நகர சபைத் தேர்தலில் மணி என்பவர் போட்டியிட்டார்; ஆனால் எதிர்த்துப் போட்டியிட்ட ரெங்கசாமி நாயுடு வெற்றிபெற்றார்; குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் காங்கிரசிற்காக வேலை செய்தவர்கள் என்பது தெரியாது; தி. மு. கழகத்தின் தொடக்கத்திலிருந்தும், சுயமரியாதை இயக்கத்திலுமாகச் சுமார் 15 ஆண்டுகள் இருந்து வருகிறேன்; தற்சமயம் சொந்தமாக பாத்திர வணிகம் செய்து வருகிறேன்; வாசகசாலை ஆண்டுவிழாவில் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்க நான் வரவில்லை; வேலையில்லாத நேரத்தில் பேச்சிமுத்து வீட்டில் தான் இருப்பது வழக்கம்; ஆண்டு விழாவில் பேசிய பேச்சுக்களும், பாடிய பாட்டுக்களும், எனக்குக் கோபத்தை உண்டுபண்ணவில்லை; குழப்பம் ஏற்பட்டவுடன் கூட்டத்தினர் நான்கு திசைகளிலும் கலைந்தனர்; கூட்டத்தில் கல் எறியப்பட்டதா என்பது தெரியாது; நானும், கூட்டத்தில் கல்லைப் போடவில்லை; நானும், பேச்சிமுத்துவும் சென்று போலீசில், வீட்டுப் படம் உடைக்கப்பட்டது குறித்து புகார் செய்யவில்லை; மறுநாள்தான் புகார் செய்தோம்.”

இத்துடன் இன்றைய வழக்கு விசாரணை முடிவடைந்தது. மேலும் இதர சாட்சிகளை விசாரிப்பதற்காக பிப்ரவரி 3-ம் தேதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

கொழும்பு, ஜன. 22—

கொழும்புவில், 16, 17, 18 தேதிகளில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கலந்து கொள்ள இங்கு வந்த தோழர் க. அன்பழகன் அவர்களை, இலங்கை தி. மு. கழகத் தோழர்கள் சந்தித்து உரையாடினர்.

# 'வ. உ. சிதம்பரம்' கப்பலை சர்க்கார் கைப்பற்றினர்

—[o]—

## தூத்துக்குடி — கொழும்பு கப்பல் போக்குவரத்து நிறுத்தம்

தூத்துக்குடி, ஜன 22 —

தூத்துக்குடிக்கும் - கொழும்புக்குமிடையே பிரயாணிகள் கப்பல் சர்வீஸ் நடத்திக் கொண்டிருந்த 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்' கம்பெனியின் 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பல், சர்க்காரால் வசப்படுத்திக் கொள்ளப்பட்டது; கப்பல் போக்குவரத்தும் இப்போதைக்கு நிறுத்திவைக்கப்பட்டு விட்டது. இத்துடன், கம்பெனிக்குச் சொந்தமான 'புதுக் கோட்டை' என்ற நீராவிப் படகும், கம்பெனியின் இதர சொத்துக்களும் கைப்பற்றப்பட்டன.

1948-ல், கவர்னர் - ஜெனரலாக இருக்கையில், சி. இராஜகோபாலாச்சாரியார் இந்தக் கப்பலை மிதக்க விட்டார். அப்பொழுது சென்னை சர்க்கார் இந்தக் கம்பெனிக்கு ரூ 5,33,500 கடன் கொடுத்திருந்தார்கள். கடன் தவணைகளைத் திருப்பிக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டால் கம்பெனி உரிமைகளை சர்க்கார் வசப்படுத்திக் கொள்ளலாம் என்பது கடன் நிபந்தனைகளில் ஒன்று.

"சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை, கப்பல் போக்குவரத்தை லாபகரமாக நடத்த முடியவில்லை; ஆகையால், உங்கள் பணத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டியதைச் செய்து கொள்ளுங்கள்" என்ற கம்பெனி வேண்டுகோளின் மீதே சர்க்கார் இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். 'புதுக்கோட்டை' என்ற மோட்டார் படகும் வசப்படுத்திக் கொள்ளப்பட்டது.

மேற்கொண்டு சர்வீசைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பதை சர்க்கார் இனி மேல்தான் முடிவு செய்துகொள்வார்களென்று அதிகாரபூர்வமாகத் தெரிகிறது.

### கைத்தறித் துணியின் தர நிர்ணயம்

புதுடில்லி, ஜன 23—

கைத்தறித் துணிகளின் தர நிர்ணயம் பற்றிக் கவனிக்க அகில-இந்திய கைத்தறி போர்டு, அட்ஹாக் கமிட்டி யொன்றை நியமித்திருக்கிறது. ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறித் துணிகள் பற்றி புகார்கள் வருவதால், முதலில் ஏற்றுமதி துணிகள் தர நிர்ணயம் பற்றி கவனிக்கப்படும்.

எல்லா ரக கைத்தறி துணிகளுக்குமே தர நிர்ணயம் செய்யப்படவிருக்கிறது இந்த வேலைக்காக, இந்திய சர்க்கார், பத்தாயிரம் ரூபாய் அனுமதித்துள்ளது

### நெய்வேலித் திட்டம்— ஓர் மறுப்பு

சென்னை, ஜன. 23—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தில், வேலை சம்பளம் முதலியவைகளில் தமிழர்களைவிட வங்காளிகளுக்கு அதிகச் சலுகை காட்டப்படுகிறது என்று ஒரு பத்திரிகையில் வெளியான செய்தியை செக்ரடேரியட் வட்டாரங்கள் மறுக்கின்றன. பொறுப்பு வாய்ந்த கமிட்டி இந்த வேலை செய்கிறது.

### ரஷ்யாவிலிருந்து வரும் எண்ணெய்

சேகரித்து வைக்க சென்னையில் ஏற்பாடு

சென்னை, ஜன. 23—

இந்திய—சோவியத் உடன்படிக்கையின்படி இந்தியாவில் இறக்குமதியாகும் ரஷ்ய எண்ணெயை சேகரித்து வைத்து இராயபுரத்தில், புது 'ஸ்டோரேஜ் டாங்கி' கட்டப்படும். இதில் இருபது லட்சம் காலன் எண்ணெயை நிரப்ப முடியும்.

### கல்யாணியில் விபத்துக்கள்!

கல்யாணி, ஜன. 23—

காங்கிரஸ் நகரில் ஒரு டஜன் மோட்டார் விபத்துக்கள் நிகழ்ந்தது; ஒரு கான்ஸ்டேபிள் படுகாயமடைந்தார். எழுபது பேர் மலேரியாவினாலும், வயிற்றுப் போக்கினாலும், அவதிப்படுகின்றனர்; அவர்களுக்கு தற்காலிக ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

காங்கிரஸ் நகர் கண்காட்சியில் ஒரு டீக்கடையில் தீ விபத்து ஏற்பட்டது; அது உடனே அணைக்கப்பட்டது. ஒரு ஜேப்படி திருடனை போலீசார் பிடித்தனர்; பிரதிநிதிகள் முகாமில் இரண்டு திருட்டுகள் நிகழ்ந்தனவென்று புகார் செய்யப்பட்டன.

### பாக்-ரயில் விபத்து

மேலும் சில தகவல்கள்

கராச்சி, ஜன. 22—

கராச்சியிலுள்ள வடமேற்கு ரயில்வே டிவிஷனல் சூப்ரண்டெண்ட் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் ரயில் விபத்துக்களில் மாண்டவர்கள் தொகை திட்டவட்டமாகத் தெரியவில்லையென்றும், இவ்விபத்தினால் ரயில்வேக்கு ரூ 15 லட்சம் நஷ்டமென்றும் கூறப்பட்டுள்ளது.

மாண்டவர்களின் தொகை 200-லிருந்து முன்னூறுக்கு மேல் இருக்குமென்று பத்திரிகைகள் கூறுகின்றன.

விபத்து பற்றிய விசாரணை நடத்த பாகிஸ்தான் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

விபத்து குறித்து, பாக்-கவர்னர்-ஜெனரலும், ராஜேந்திர பிரசாத்தும் துக்கம் தெரிவித்துள்ளனர்.

### தாலமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்

மதுரை, ஜன. 19—

9—1—54ல், நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் புதிய ஆண்டுச் செயலாளராக என். எஸ். ராசாவும், துணைச் செயலாளராக க. கணபதியும், பொருளாளராக மு. சருப்பையாவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும், நகர தி. மு. கழகத்தின் பிரதிநிதிகளாக என். எஸ். ராசாவும், பெ. மாடசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### வல்லம்படுகை தி. மு. கழகம்

20—1—54ல் தி மு. கழகத் தேர்தல் நடைபெற்றது அதுபோது தோழர்கள் கோ. சேகரு செயலாளராகவும், அ. அமிர்தலிங்கம் துணைச் செயலாளராகவும், மு. அஞ்சாப்புலி பொருளாளராகவும், கே. நாராயணசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### நீடாமங்கலத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

15—1—54-ல், சிவலிங்கம் பிள்ளை சத்திரத்திற்கு எதிரில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் பி. டி. அரசு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் மு கருணாநிதி, என் எம். வைத்திலிங்கம், சி. கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர், "தி. மு. கழகமும், தற்கால அரசியலும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

### சென்னிமலையில் கலைவாணர் என். எஸ். கே

19—1—54 செவ்வாய் அன்று சென்னிமலைக்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு சென்னிமலை தி. மு. கழக சார்பில், ஓர் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது வரவேற்புக்கு நன்றி தெரிவித்து, கலைவாணர் பேசுகையில், நாடகத்தின் மூலமாக, தான், பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வருவதாகவும், தானும், தி. மு கழகத்தைச் சேர்ந்தவன் தான் என்றும் கூறி நன்றி தெரிவித்தார்

### கமுதியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

கமுதி, ஜன. 22 —

17—1—54ல், தி. மு. கழகச் சார்பில், குண்டாறு திடலில் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் எ வி பி. ஆசைத்தம்பி 'தனியரசு ஏன்?' என்னும் பொருள்பற்றிப் பேசினார்.

### கைத்தறித் தொழிலுக்கு உதவி!

கல்கத்தா, ஜன. 23 —

கைத்தறித் துணிகள், குறைந்த விலைக்கு மக்களுக்குக் கிடைக்கவும், இத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உதவவும், மேற்கு வங்க சர்க்கார், விற்பனையாவதில் ஒரு ரூபாய்க்கு ஒரு அணா 'ரிபேட்' அளிக்க முடிவு செய்துள்ளனர்.

### நிர்ப்பந்தம்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யது அவசியம். எல்லைகளில் சில மாறுதல்களும், போக்கு —வரத்து ஏற்படுவதையும் தடுக்க முடியாது. பல சர்ச்சைக்குரிய பெரிய விஷயங்கள் எழும்பக்கூடும்; அவைகளை ஆத்திரப்படாமல் தீர்க்க வேண்டும் சர்க்காரிடம் நிர்ப்பந்த முறைகளைக் கையாண்டால் நேர்மாறான பலன்தான் கிடைக்கும்," என்றார்.

### திருமணம்

★

சென்னை, ஜன. 22—

இன்று காலை 9 மணிக்கு தோழர் மதுரமுத்துவுக்கும்—தோழியர் சவுந்திரகோகிலத்திற்கும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில், சென்னை சவுகார்பேட்டை, சந்திரப்ப முதலி தெரு, 16 எ. என்னுள்ள இல்லத்தில், திருமணம் நடைபெற்றது. 'நம் நாடு' பொறுப்பாளர் தோழர் அ பொன்னம்பலனார், சென்னை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் கண்ணபிரான் வாழ்த்து கூறினார் இறுதியில், தோழர் லிங்கலிங்கம் (தி. க) நன்றி கூறி, அந்துக்கு நிதிக்காக ரூ. 25-ம் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ 4-ம் கொடுத்தனர். நிதித் தொகையை பொறுப்பாளர் பொன்னம்பலனார் பெற்றுக் கொண்டார்—இத் தொகைகள் வரப்பெற்றோம் — நன்றியுடையது —பொறுப்பாளர்

பொதுச் செயலாளர்

### அண்ணாதுரை மாயவரம் வருகை

★

நடராசன் நினைவு வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு, 31—1—54 ஞாயிறு மாலை நகரப் பூங்காவில், தோழர் எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் அண்ணாதுரை, கே. ஆர். சம்பந்தம், பி. ஏ., எம். எல் ஏ., ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசுவர். அவ்வமயம் நடராசன் நினைவு வாசகசாலை சார்பில் வசூலித்த தூத்துக்குடி நிதிக்கு ரூ. 501 கொடுக்கப்படும்.

## கழகக் கூட்டங்கள்

★

### குன்னத்தூர்

24—1—54 மாலை 7 மணிக்கு

தலைவர் :

தோழர் கே. என். நடராசன்

பேசுபவர் :

தோழர் என். வி. நடராசன்

காலை 9 மணி முதல் போட்டிப் பந்தயங்களும் பரிசளிப்பு விழாவும், இரவு 10 மணிக்கு கோவை இ. க. வி குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

★

### கோவை

26—1—54 மாலை 6 மணிக்கு

இடம் : ஆர். எஸ். புரம் டவுன்ஹால் மைதானம்

பேசுவர் :

தோழர் இரா. நெடுஞ்செழியன்

★

### கோடம்பாக்கம்

24-1-54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் (63, ஆற்காட்டுச்சாலை) பொங்கல் விழா கூட்டம் தோழர் இறையரசு அவர்கள் தலைமையில், 'திராவிடர் திருநாள்' என்பது பற்றி, தோழர்கள் புலியரசு, சா. கணேசன், க. இளங்கீரன், கிருஷ்ணமூர்த்தி, வீர அன்பரசு ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3-30 மணிக்கு, திரு. வி. க. பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பும் பொங்கல் வழங்கப்படும். சிறுவர்கள் பொங்கல் விழா என்பது பற்றி பேசுவர்

• • *

### சென்னை 35-வது வட்ட உறுப்பினர்களுக்கு

23—1—54 சனி இரவு 8-30 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், கழக வரவு-செலவு கைத்தறித் துணி விற்பனை வரவு-செலவு, கழக நிர்வாகம் ஆலோசனைகள் பற்றி விவாதிக்கப்படும் செயற் குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுகிறேன் என, செயலாளர் தோழர் புலியரசு அறிவிக்கிறார்.

### ஆலந்தூர் தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

★

23—1—54 இரவு 9 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். செயற் குழு உறுப்பினர் அனைவரும் அவசியம் வருமாறு பொருளாளர் கேட்டுக் கொள்கிறார்.

o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o

கலைஞர்

கருணாநிதியின்

எழுத்தோவியங்கள்

★

1. முத்தாரம் 0-12-0
2. இரத்த கண்ணீர் 2- 0-0
3. ஆறு மாதக் கடுங்காவல் 2- 0-0

★

திராவிடப் பண்ணை,

தெப்பக்குளம், திருச்சி.

o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o

### நூல் கையிருப்பு அதிகரித்துவிட்டது

சென்னை சர்க்காருக்கு வியாபாரிகள் கோரிக்கை

சென்னை, ஜன 23—

சென்னை மாநிலத்திற்கு வெளியே நூல் ஏற்றுமதி செய்ய பொது பர்மிட்டு கொடுத்து, அனுமதி தரவேண்டும் என்று சென்னை சர்க்காருக்கு சென்னை நூல் வியாபாரிகள் சங்கத்தினர் ஒரு கோரிக்கையை அனுப்பியுள்ளனர்.

உற்பத்தி அதிகரித்து வருவதுடன், இந்தியாவுக்கு வெளியே நூல் ஏற்றுமதிக்குத் தடை இருப்பதால் கையிருப்பு அதிகரித்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

### திருச்செந்தூர் தி. மு. கழகம்

17—1—54ல், பொதுக்குழு கூட்டம் தோழர் வில்லவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் மு கருணாநிதி தலைமையில், 'பரப்பிரம்மம்' நாடகத்தை 7—3—'54ல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எதிரில், தோழர் எஸ். மெய்கண்டான் கொடியேற்றி வைத்தார்.

### இராயநல்லூர் தி. மு. கழகம்

இராயநல்லூர், ஜன 22—

துணைச்செயலாளர் ஆர். திராவிடமணி, உறுப்பினர்கள் ஆர். எஸ். இளங்கோ, எ ராமலிங்கம், டி. ராமலிங்கம் ஆகியோரை விலக்கிவிட்டு, நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், துணைச் செயலாளராகத் தோழர் சிவஞானம் அவர்களையும், உறுப்பினர்களாகத் தோழர்கள் தனபாலு, ரஷீத் ஆகியோரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### கள்ளத்தனமாய் குடியேற முயன்றவர்கள் கைது

சென்னை, ஜன. 22—

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கான இந்திய சர்க்கார் விசேஷ அதிகாரி, போலீசாரின் கூட்டுறவுடன், திருநெல்வேலி ஜில்லா, காங்குனேரித் தாலுகாவில், உவரி என்னுமிடத்தில் ஜனவரி 20-ந் தேதி திடீர் சோதனை நடத்தி, கள்ளத்தனமாகக் குடியேறத் தயாராயிருந்த 15 பேரையும், தரகர் ஒருவரையும் பிடித்தார். பிடிபட்ட நபர்கள் மீது வழக்குத் தொடர்வதற்காக அவர்கள் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.